| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | நாள் | 07.04.2021 |
| தகப்பனார் பெயர் | வெங்கட்ராமன் | | |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய தாத்தா பெயர் மாரிமுத்து. என்னுடைய தாத்தா மாரிமுத்துவின் அப்பா பெயர் ராமசாமி. என்னுடைய தாத்தாவிற்கு 1 பெண், 2 ஆண்மக்கள். என்னுடைய தாத்தாவிற்கு எவ்வளவு விவசாய நிலங்கள் இருந்தது என்றால் சுமார் 10 ஏக்கர் இருந்தது. என்னுடைய பெரியப்பா தாசகவுண்டருக்கு எவ்வளவு நிலம் என்றால் 5 ஏக்கர், என்னுடைய தகப்பனாருக்கு 5 ஏக்கர். என்னுடைய தகப்பனார் பெயர் வெங்கட்ராமன். என்னுடைய தகப்பனாருக்கு 3 ஆண்மக்கள், 2 பெண்மக்கள். மினிச்சி, நான், மாரி, முனியப்பன், பெருமாயி. எங்களுக்குள் பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் பிரித்து தான் ஓட்டி வருகிறோம். பாகபிரிவினை பத்திரம் பதிவு செய்துள்ளோம் என்றால் பாகபிரிவினை செய்யவில்லை. மொத்தமாக ஓட்டி வருகிறோம். என்னுடைய தகப்பனாருக்கு எத்தனை சர்வே எண்களில் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் படிப்பறிவு இல்லை என்பதால் என்ன சர்வே எண் என்பது தெரியாது. எத்தனை சர்வே எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 252/5, 252/10, 252/11–க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த சொத்து தான் எனக்கு ஒதுக்கப்பட்டதா என்றால் மற்ற சொத்துக்களும் உள்ளது. இதில் தான் தகராறு செய்தார்கள். மற்ற சொத்துக்களின் சர்வே எண் என்னவென்றால் படிப்பறிவு இல்லை என்பதால் தெரியாது. சர்வே எண்.252/5–க்கு நான்கெல்லை தெரியுமா என்றால் முனியகவுண்டருக்கும் கிழக்கு, சின்னகவுண்டருக்கும் வடக்கு, முனியப்பன் நிலத்திற்கும் மேற்கு, கோவிந்தன் நிலத்திற்கும் தெற்கு. 252/10–க்கு நான்கெல்லை என்னவென்றால் அதிலே தான் உள்ளது. சாட்சி தன்னிச்சையாக 8, 9, 12 ஆகியவையும் அதிலே தான் உள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். 252/11–க்கு நான்கெல்லை என்னவென்றால் அதிலே தான் உள்ளது. சாட்சி தற்போது 5 சர்வே எண்களும் அதே செக்குபந்திக்குள் உள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். 5 சர்வே எண்ணிற்கும் சேர்த்து தான் அந்த செக்குபந்தியை கூறியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி சொத்துக்களுக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் மாரிமுத்து பெயரில் 3 சர்வே எண்களுக்கு உள்ளது. அவர்

என்னுடைய பாட்டன்.

பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/—எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.